# முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை உதவி அமர்வு நீதிபதி.
## S.C. No.147/2017

அ.சா.6 தேதி. 03.02.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | த/பெ. | நாகராஜன் |
| வயது | 59 | தொழில் | உதவி அய்வாளர் பெரம்பூர் காவல் நிலையம். |
| கிராமம் | பெரம்பூர் | தாலுக்கா | தரங்கம்பாடி தாலுக்கா |

(எதிரிகள் ஆஜர்).

(சாட்சி 311 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை:-

நான் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2016 ஆம் தேதி பாலையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது கோடிமங்களம் தெற்குத்தெருவைச்சேர்ந்த ராமவர்மாமகன் ரகுவர்மா நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று 26.02.2016 அன்று மாலை 04.00 மணிக்கு எனது வீட்டிலிருந்து எனது மோட்டார் சைக்கிளில் எஸ்.புதுார் சென்றுகொண்டிருந்தபோது மேற்படி கோடிமங்களம் கிராமத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் சங்கர் கணேஷ் முன் விரோதம் காரணமாக அவர் வீட்டின் முன்பு என்னை வழிமறித்து என்னடா குச்சிகாரி மகனே, தேவடியா மகனே நீ என்ன பெரிய ஆளா என்றுக்கூறி அடித்து என்னை கீழே தள்ளினார் என்றும், தொடர்ந்து பாலகிருஷ்ணன், திலகவதி, குணசுந்தரி ஆகிய மூன்றுபேரும் என்னை கம்பால் அடித்தனர் என்றும், உடனே சங்கர் கணேஷ் வீட்டின் உள் இருந்த அருவாளை எடுத்துவந்து இத்தோடு ஒழிந்துபோடா குச்சிகாரி மகனே என்று கூறி எனது கழுத்தை குறி வைத்து வீசினார். நான் எனது தலையை குனிந்துகொண்டதால் நான் அதிஷ்டவசமாக உயிர் தப்பினேன் என்று கூறி என்னை தாக்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறி புகார் அளித்தார். அந்த புகார்அசாஆ1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி புகாரினை விசாரித்து 26.02.2016 அன்று 22.00 மணிக்கு பாலையூர் காவல் நிலையம் குற்ற எண் 29/2016 இதச பிரிவு 341, 294(b), 352, 506(ii) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவசெய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அன்றைய தினம் 23.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலியபெருமாள் மகன் அன்பழகன், பொன்னுசாமி மகன் கலியமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிபடம் வரைந்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஏற்கனவே அசாஆ3, மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 6 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

இந்த வழக்கானது முதலில் பதிவுசெய்தது இதச 506(ii)பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். எனது புலன் விசாரணையில் இதச பிரிவு 506(ii) ன் கீழ் தான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் அன்பழகன் மற்றும் கலியமூர்த்தி இருவரையும் சாட்சிகளாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது குற்றப்பத்திரிக்கையில் சாட்சி பட்டியலில் 5 வது சாட்சி ஜெயராஜ் மற்றும் 6வது சாட்சி குணசேகர் இருவரையும் பார்வை மகசர் சாட்சிகளாக குறிப்பிட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த 5 மற்றும் 6 சாட்சிகள் பார்வை மகசரில் கைபொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் சாட்சிகள் பெயர் மாறியுள்ளது பற்றி ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. ஆய்வாளர் அதுப்பற்றி விசாரித்தாரா என்றால் இல்லை.

நான் சொன்ன தேதி, வருடத்தில் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் அசா1 புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் தன்னிச்சையாக எழுதப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லைஎன்றாலும் சாட்சிகளை சரிவர விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.